**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**O.S.No.187/2017**

Date: 28.06.2023

PW1 – குறுக்கு விசாரணை

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

நான் MCA படித்திருக்கிறேன். 2012 ஆம் வருடத்தில் நான் 7/24 எண்டர்பிரைசர்ஸ் நிறுவனத்திலும் 7x24 எண்டர்பிரைசஸ் நிறுவனத்திலும் ஒரே சமயத்தில் பணிபுரிந்தேன் என்றால் 7x24 எண்டர்பிரைசஸ் நிறுவனத்தில் மட்டும் தான் வேலை செய்தேன்,. 7/24 எண்டர்பிரைசஸ் நிறுவனத்தில் வேலை செய்யவில்லை. 7/24 எண்டர்பிரைசஸ் நிறுவனமானது கூட்டாண்மை நிறுவனம் என்றால் சரிதான். 7/24 எண்டர்பிரைசஸ் நிறுவனமானது எனக்கு எப்போது இருந்த பரிட்சியமானது என்றால் அந்த நிறுவனம் தொடங்கப்பட்ட காலமான நவம்பர் 2011 முதலே அந்த நிறுவனத்தை எனக்கு தெரியும்.

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களுக்கும் அலுவலக முகவரியானது ஒரே இடத்தில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. இருவேறு முகவரிகளில் அமைந்துள்ளது. 7/24 எண்டர்பிரைசஸ் நிறுவனத்தில் நான் 2013 ஆம் ஆண்டு 2 வது மாதத்திற்கு மேல் கூடுதலாக பார்த்துக்கொண்டேன். அதற்காக நான் சம்பளம் பெற்றுக்கொள்ளவில்லை.

கேள்வி– நான் 7/24 எண்டர்பிரைசஸ் நிறுவனத்தில் பணிபுரிந்த சமயத்தில் அந்த நிறுவனம் சம்மந்தப்பட்ட 7 காசோலைகள் காணமல்போய்விட்டதாக 3 ஆம் பிரதிவாதி கலைமணி என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் அழகாபுரம் காவல் நிலைய கு.எண்.302/2014 என்று ஒரு குற்ற வழக்கானது என் மீது பதிவு செய்யப்பட்டதா?

பதில்– நான் அந்நிறுவனத்தில் பணிபுரிந்த சமயத்தில் அந்த வழக்கு பதிவு செய்யப்படவில்லை. 7/24 எண்டர்பிரைசர்ஸ் நிறுவனத்தின் ஒரு காசோலை ரிட்டன்

ஆகிவிட்டது. அதற்கு கொடுக்கவேண்டிய பணத்தை இழுத்தடிக்கவேண்டி மேற்கண்ட பொய் புகாரானது கொடுக்கப்பட்டது.

என்னிடம் இருந்து ரொக்கமாக 7/24 எண்டர்பிரைசஸ் நிறுவனமானது தொகை பெற்றுக்கொண்டதில்லை. எனக்கும் 7/24 எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கும் எழுத்துபூர்வமான ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. நான் எந்த ஒரு பிரதிபலனும் இல்லாத காசோலையை நான் வசூலுக்கு தாக்கல் செய்த காரணத்தினால் அது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

7/24 எண்டர்பிரைசஸ் நிறுவனமானது வங்கியில் இருந்து over due facility பெற்றுக்கொள்வதற்காக நான் எனக்கு சொந்தமான சொத்துக்களின் ஆவணங்களை ஜாமீன்தார் என்ற அடிப்படையில் கொடுத்து உதவி செய்ததாக என்னுடைய வழக்குரையிலோ அல்லது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்திலே சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியிருக்கிறேன்.

கடந்த 2014 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் எனக்கும், 7/24 எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் பங்குதாரர்களான 2, 3 பிரதிவாதிகளுக்கும் இடையே எனது மேற்படி சொத்து பத்திரங்களை திரும்ப கொடுப்பது சம்மந்தமாக ஒரு தகராறு ஏற்பட்டதா என்றால் பிப்ரவரி மாதம் 2014 இல் நடைபெறவில்லை. 03.07.2014 அன்று பிரச்சனை ஏற்பட்டது. 2014 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நான் 7/24 எண்டர்பிரைசஸ் நிறுவனத்தில் பணியிலிருந்து விலகிவிட்டேன் என்றால் சரியல்ல. 03.07.2014 வரை வேலை செய்தேன்.

என்னுடைய வழக்குரை மற்றும் முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 7/24 எண்டர்பிரைசஸ் நிறுவன பணியிலிருந்து நான் 2014 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் விலகிவிட்டதாக சொல்லிவிட்டு தற்போது அதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கூட்டாண்மை நிறுவன சரத்துகளை பற்றி எனக்கு தெரியுமா என்றால் முழுமையாக தெரியாது. 7/24 எண்டர்பிரைசஸ் நிறுவனத்தில் நான் Service Engineer ஆக வேலை செய்தேன். எனக்கு தனியாக கேபின் கிடையாது.

வழக்கு காசோலையானது எனக்கு யாரால் கொடுக்கப்பட்டது என்று எனது வழக்குரையிலும், முதன்மைசாட்சிய பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை

என்றால் சரியல்ல. சொல்லியிருக்கிறேன். சொல்லியிருப்பதாக பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. அந்த காசோலையை யார் எழுதி கையொப்பம் செய்து கொடுத்தார்கள் என்று எனது வழக்குரையிலும், முதன்மைசாட்சிய பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் அதனை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. 3 ஆம் பிரதிவாதி எனக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புகை கடிதம் யாரால் டைப் செய்யப்பட்டு யார் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது என்று எனது வழக்குரையிலும், முதன்மைசாட்சிய பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் அதனை யார் டைப் செய்தது என்றும், யார் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது என்றும் எனக்கு தெரியாது.

அந்த ஆவணத்தை நானே டைப் செய்து 3 ஆம் பிரதிவாதியின் கையொப்பத்தை போன்று போர்ஜரியாக கையொப்பம் செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா காசோலையை நானே பூர்த்தி செய்து அதில் 2 ஆம் பிரதிவாதியின் கையொப்பத்தை போன்று போர்ஜரியாக கையொப்பம் செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த வித பிரதிபலனும் இல்லாத ஒரு காசோலையை நானே போலியாக உற்பத்தி செய்து வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் இந்த வழக்கு காலாவதிதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem.